மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2026– ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**E.A.No. 3 /2019**
**in**
**E.P.No.10/2019**
**in**
**OS.No.156/2017**

1.நவீத சங்கர்
2.நவீததுரை ... மனுதாரர்கள்/தடங்கல்காரர்கள்/புதியநபர்கள்

**//எதிர்//**

1.N.T.சிவசுப்பிரமணியன் ... எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

2.வேலசுப்பிரமணியன் ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.யா.ஏனோஸ் பெஞ்சமின் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.ராகவன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை சீர்தூக்கிப்பார்த்தும் இன்று (17.04.2026) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்...

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 58, 97, 101 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரரை தடங்கல்காரராக அங்கீகரித்து தபசில் சொத்தின் மீதான மனுதாரரின் உரிமைகள் மற்றும் உரிமை மூலங்கள் குறித்து தீர்மானிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:05 +0530

**2. மனு சுருக்கம்**

அ) நிறைவேற்றுதல் மனுவில் மனுதாரர்கள் தரப்பினர்கள் அல்ல, 3ம் நபர்கள். நிறைவேற்றுதல் மனுவில் தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்தினைப் பொறுத்து ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி மனு செய்யப்பட்டுள்ளது. தபசில் சொத்தானது ஆதியில் மனுதாரர்களின் தாயார் மங்களம்மாளுக்கு பட்டா எண்.383 மூலம் பாத்தியப்பட்டது. மனுதாரர்களின் தாயார் மனுதாரர்களுக்கு 07.05.2013ம் தேதியில் ஏற்பாடு ஆவண எண்.476/2013 மூலமாக பாத்தியப்படுத்திக் கொடுத்தது முதல் மனுதாரர்கள் தனித்த உரிமைதாரர்களாக அனுபவித்து வருகின்றனர்.

ஆ) எதிர்மனுதார்கள் இருவரும் வாதி பிரதிவாதியாக இருந்து, மனுதாரர்களையும் உரிய நபர்களையும் கட்சியாக சேர்க்காமல், பாகப்பிரிவினை வழக்குத் தாக்கல் செய்து விசாரணை நடைபெறாமல், எதிர்மனுதாரர்களுக்குள்ளாக சமரசத் தீர்ப்பாணையை பெற்றுக் கொண்டுள்ளனர். எதிர்மனுதார்கள் இருவரும் வாதிகளாக இருந்து தொடர்பில்லாத நபர்கள் மீது விளம்புகை உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து ஒருதலைபட்சத் தீர்ப்பாணை பெற்றுள்ளனர். பின்பு அவர்களுக்குள் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் போல உருவாக்கி கொண்டு அதை பொறுத்து வாதி பிரதிவாதிகளாக இருந்து ஏற்றதை ஆற்றுகப் வழக்கு தாக்கல் செய்து அதிலும் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை பெற்றுள்ளனர். நிறைவேற்றுதல் மனுவில் 2ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாகியுள்ளார்.

இ) மேற்படி நீதிமன்ற நடவடிக்கைகளில் மனுதார்கள் தரப்பினர் இல்லை. மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மீது அவர்களுக்கு தெரியாமல் நிறைவேற்றுதல் நடவடிக்கை எடுக்க படிப்படியாக திட்டமிட்டு செயல்பட்டுள்ளனர். இந்த சங்கதிகள் யாவும் மனுதாரர்களையும், எதிர்மனுதார்களையும் தரப்பினர்களாக சேர்த்து இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 64/18 வேறு நபர்களால் தாக்கல் செய்யப்பட பின்பாக, மனுதாரர்களின் வழக்கறிஞரின் ஆய்வுக்கு பின்பு தான் தெரிய வந்தது. மேற்படி

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:09 +0530

வழக்குகளில் மனுதாரர்களை இணைத்து மீண்டும் விசாரணை செய்வதற்கு மனு செய்ய வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுக்க உள்ளனர்.

ஈ) தபசில் சொத்தினைப் பொறுத்து எதிர்மனுதார்களின் உரிமைமூலம் ஆவணம் மற்றும் சாட்சி விசாரணைகளின் மூலம் நிரூபிக்கப்பட்டு உறுதிபடுத்தப்படவில்லை. சமரசத் தீர்ப்பாணை வாதி மற்றும் பிரதிவாதி இடையேயான ஒரு ஒப்பந்த தீர்வு தானே தவிர நீதி முறையில் தீர்மானிக்கப்பட்டதாகாது. பாகப்பிரிவினை தீர்ப்பாணை பதிவு செய்யப்படவோ இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவோ இல்லை. அதன் மூலம் எந்த உரிமையும் எழுவதில்லை. பாகப்பிரிவினை வழக்கில் சொல்லப்பட்ட தபசிலும், ஏற்றுதை ஆற்றுதல் வழக்கில் சொல்லப்பட்ட தபசிலும் வேறு வேறாகும். மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கதவு எண்கள்.1/168, 1/169, 1/170 கொண்ட வீடுகள் பாகப்பிரிவினை வழக்கின் சொத்துகள் இல்லை. ஆனால், ஏற்றுதை ஆற்றுதல் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. பாகப்பிரிவினை வழக்கில் எதிர்மனுதார்கள் இருவருக்கும் பிரிவின்றி 6 சென்ட் இடம் என்று கட்சி செய்திருக்க, நிறைவேற்றுதல் மனுவில் 12 சென்ட் இடமும், 3 வீடுகளும் தபசிலாக காட்டப்பட்டுள்ளது ஆச்சர்யமளிக்கிறது.

உ) தபசில் சொத்தினை தீர்மானிப்பதில் குழப்பம் உள்ளதால் தீர்ப்பாணை நிறைவேற்றத் தக்கதல்ல. நிறைவேற்றுதல் நீதிமன்றம் நிறைவேற்றுதலுக்கு முன்பாக அதற்குரிய சொத்தின் தன்மைகள், தரப்பினர்களின் உரிமைகள், உரிமைமூலம் குறித்து கேள்விகள் எழுப்பி பரிசீலித்து தீர்மானிக்க அதிகாரம் பெற்றுள்ளது என்பதால், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உபயமனுதாரர்களின் உரிமைமூல ஆவணங்களை பரிசீலித்து தபசில் சொத்தினைப் பொறுத்து நிறைவேற்றுதலை தீர்மானிக்க வேண்டியது நீதியின் பொருட்டு நியாயமாயும் அவசியமாயும் இருக்கிறது. உரிய தரப்பினர்களை சேர்க்காமல் மோசடியாக பெற்ற தீர்ப்பாணை நிறைவேற்றப்படாமல் நிறைவேற்றுதல் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:46:13 +0530

**<u>3.1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்</u>**

அ) மனு சங்கதிகள் வரிவரியாக குறிப்பிடப்பட்டு உண்மையல்ல என்று மறுக்கப்பட்டுள்ளது. அகரம் கிராமம் அ.பு.சர்வே 48/5 செண்ட் 12ம் அதில் கட்டப்பட்டுள்ள அகரம் கிராம ஊராட்சி 1ம் வார்டு கதவு எண்கள் 1/168, 1/169, 1/170 ஆகிய பூர்வீக வீடுகளை 1ம் எதிர்மனுதாரரும் அவரது சகோதரரான 2ம் எதிர்மனுதாரரும் ஊராட்சிக்கு வீட்டு வரிகள் செலுத்தி குடியிருந்து அனுபவித்து வருகின்றனர். மேற்படி வீடுகள் எதிர்மனுதாரர்களின் தாத்தா காலம் சென்ற பே.நாராயண நாடார் அவர்களால் 1916–1917ல் கட்டப்பட்டு எதிர்மனுதாரர்ளுக்கு பூர்வீக பாத்தியமாய் கிடைத்த வீடுகள் ஆகும். எதிர்மனுதாரர்களின் தாத்தா 1925ம் வருடம் ஆவண எண்.11/1925 வாயிலாக பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் அவரது ஆண் மக்களான நா.அருணாசலம், நா.தங்கவேல், நா.துரையப்பன் ஆகியோருக்கு பாத்தியப்படுத்தி கொடுத்து விட்டார். அகரம் கிராமம் முன் ஜமீன் கிராமம் ஆகும். மேற்படி உயிலில் மேற்படி வீடுகள் இருக்கும் ஜமீன் சர்வே எண்கள் 52/1ஏ மற்றும் 52/1ஏபி செண்ட் 11 என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) 1ம் எதிர்மனுதாரின் தாத்தா பே.நாராயண நாடாரின் ஆயுளுக்கு பின் மேற்படி வீடுகளும் வேறு சொத்துக்களும் 1ம் எதிர்மனுதாரரின் தந்தை நா.தங்கவேல் நாடார், பெரியப்பா நா.அருணாசலநாடார், சித்தப்பா நா.துரையப்பன் நாடார் ஆகிய மூவருக்கும் கூட்டாக பாத்தயப்பட்டு அனுபவித்து வந்தனர். 1958–59ம் வருடத்தில் ஜமீன்தாரி முறை மாற்றப்பட்ட போது வீடுகள் இருக்கும் நிலத்திற்கு முன் ஜமீன் சர்வே எண்களும் மாற்றம் செய்து ரீ சர்வே 48/5க்கு பட்டா மேற்படி மூவர் பெயரில் வழங்கப்பட்டது. 1960 வருட வாக்கில் 3 சகோதரர்களும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் சேர்த்து வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதில் புல எண்.48/5ல் உள்ள 12செண்ட் நிலமும், நிறைவேற்றுதல் மனுவில் கண்ட வீடுகளும் எதிர்மனுதாரர்களின் தந்தை நா.தங்கவேல் நாடாரின் பாகத்திற்கு கிடைத்து அவரது பெயரில் வீட்டுத்தீர்வைகள் செலுத்தி குடியிருந்து அனுபவித்து வந்தனர்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:46:16 +0530

இ) 1ம் எதிர்மனுதாரரின் தந்தை 1997 ல் இறந்துவிட்டார். 2004 ம் வருடத்தில் எதிர்மனுதார்கள் மற்றும் அவர்களது சகோதரர்களாகிய த.பாலசுப்பிரமணியன், சிவசுப்பிரமணியன், த.இராமசுப்பிரமணியன், த.வேலசுப்பிரமணியன் ஆகிய 4 பேரும் எதிர்மனுதார்களுக்கு பாத்தியபப்பட்ட சொத்துக்களை ஸ்ரீவைகுண்டம் உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.20/2004 ன் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் மேற்படி வீடுகள் எதிர்மனுதாரர்களுக்கு கூட்டாக கிடைக்கப்பெற்று, எதிர்மனுதார்களின் பெயரில் நாளது தேதி வரை பாக்கி இல்லாமல் வீட்டு வரிகள் செலுத்தி குடியிருந்து வருகின்றனர்.

ஈ) எதிர்மனுதார்களின் பெரியப்பா மற்றும் சித்தப்பா குடும்பத்திலிருந்து சிறு பிரச்சனைகள் ஏற்பட்டதால் எதிர்மனுதார்கள் வாதிகளாக இருந்து ஸ்ரீவைகுண்டம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண். 20/2010 ல் எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கப்பெற்று எதிர்மனுதார்கள் சர்வ சுதந்திரமாக நிறைவேற்றுதல் மனு தபசில் சொத்தினை அனுபவித்து வருகின்றனர். எதிர்மனுதாரர்களின் தாத்தா பே.நாராயணன் நாடார் அவரது சகோதரர் பே.ஞானமுத்து நாடாரின் மகனும், மனுதாரர்களின் தாத்தாவுமான ஞா.துரைப்பாண்டி நாடாரை அபிமான புத்திரனாக சில காலம் அவரது குடும்பத்தில் சேர்த்து வளர்த்து வந்துள்ளார். பே. நாராயணன் நாடார் 1928 ம் வருடத்தில் சில சொத்துக்களை அபிமான புத்திரனுக்கு நன்கொடை மூலம் கொடுத்து அபிமானத்தையும் ரத்து செய்துவிட்டார். நன்கொடை பத்திரத்தில் மேற்படி 3 வீடுகளும் இருந்து வருகிற முன் ஜமீன் சர்வே எண். 52/1 ஏ, 52/1 ஏபி இல்லை.

உ) 1958–59 ல் ஜமீன் சர்வே 52/1 செ 11 க்கு ரீசர்வே எண் 48/5 செண்ட் 12 என ரீ சர்வே பட்டா எதிர்மனுதாரர்களின் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்களின் தாத்தாவான ஞா.துரைப்பாண்டி நாடாரின் தந்தை பே.ஞானமுத்து நாடார் 1928 ம் வருடத்தில் பதிவு செய்து வைத்துள்ள உயிலில் அவரது மகன் ஞா.துரைப்பாண்டிக்கு எந்த ஒரு சொத்தும் கொடுக்கவில்லை எனவும், அவரது சொத்தில் துரைபாண்டிக்கு ஒன்றும் கிடையாது என

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:46:20 +0530

குறிப்பிட்டு உயில் எழுதியுள்ளார். எனவே மனுதாரர்களின் தாயார் மங்களம் அம்மாளுக்கோ மற்றும் ஞா.துரைப்பாண்டி நாடாருக்கோ 1ம் எதிர்மனுதாரரின் தாத்தா பே.நாராயண நடார் 959/1928ல் எழுதிக்கொடுத்த நன்கொடை சொத்துக்கள் தவிர வேறு 1 செண்ட் நிலம் கூட அகரம் கிராமத்தில் கிடையாது.

ஊ)2013 ஏரல் சார்பதிவகம் ஆவண எண்.476/2013 ன்படி மங்களம் அம்மாளுக்கு மட்டும் பூர்வீகமாய் சொத்து இருப்பதாகவும் அதில் 3 வீடுகள் இருப்பதாகவும் போலி பட்டா தயார் செய்து மனுதாரர்கள் பெயரில் மோசடியாக ஏற்பாடு ஆவணம் பதிவு செய்துள்ளார். ஸ்ரீவைகுண்டம் வட்டாசியரிடம் தகவல் அறியும் உரிமை சட்டப்படி விளக்கம் அளித்ததில் மேற்படி பட்டா போலியானது என்று உறுதியாகியுள்ளது. மேற்படி மோசடி ஆவணம் தொடர்பாக 1ம் எதிர்மனுதார் தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் குற்றஎண்.64/2014 ன் கீழ் மங்களம், நவீதசங்கர் (எ) கண்ணன், நவீத்துரை, முருகன், ஜெயலெட்சுமி), மணி ஆகியோர் மீது இ.த.ச.பிரிவுகள். 465, 468, 471, 420 உடன் இணைந்த 120B பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.3ல் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு C.C.24/2018 ஆக விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. 2ம் மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் உண்மைகளை மறைத்து பொய்யான காரணங்களை சொல்லி, போலியான ஆவணங்களை தாக்கல் செய்து, மனுதாரர்களின் தாயார் மங்களம் பெயரில் 3 வீடுகளுக்கு (1/1/168,1/169,1/170) தீர்வை இருப்பது போல அவைகளை அகரம் ஊராட்சித்தலைவர் தீர்வை மாற்றம் செய்ய மறுப்பது போல கண்டு W.P6582/2015 நீதிப்பேராணை மனு தாக்கல் செய்ததன் பேரில் அகரம் ஊராட்சித்தலைவர் விளக்கம் கேட்டு கடிதம் கொடுத்துள்ளார்.

எ) மேற்படி நீதிப்பேராணை மனுவின் அடிப்படையில் அகரம் ஊராட்சிமன்ற தலைவர் விசாரனை செய்து மனுதாரர்களின் மனுவை நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி தள்ளுபடி செய்துள்ளார். மனுதார் மனுவில் மேற்படி குற்ற வழக்கு மற்றும் நீதிப்பேராணை மனு விஷயங்களை மறைத்துள்ளார். மனுதார்கள் மற்றும் அவரது தாயார் மங்களம்மாள்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:24 +0530

ஆகியோருக்கு எதிர்மனுதார்களுக்கு பாத்தியப்பட்ட வீடுகளைப்பற்றி வழக்கு தொடரவோ, விசாரணை ஏற்படுத்தவோ எந்த உரிமையும் சட்டப்படி கிடையாது. சர்வே எண்.48/5ல் செ12ம் அதில் உள்ள வீடும்களும் எதிர்மனுதாரர்களுக்கு சட்டப்படி உரிமையானது ஆகும். ஸ்ரீவைகுண்டம் வட்டாசியரிடம் நவீத்துரை என்பவர் 3 வீடுகளுக்கு அனுபவச் சான்று வேண்டும் என கேட்டு மனு செய்தார். வட்டாசியரிடம் எதிர்மனுதார் தாக்கல் செய்த ஸ்ரீவைகுண்டம் உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.20/2010ன் தீர்ப்பை உற்று நோக்கி உரிமையியல் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக எவரும் செயல்பட முடியாது என்று நவீததுரையை நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.

ஏ) 1ம் எதிர்மனுதார் ஏரல் சார்பதிவகம் ஆவணஎண். 476/2013ஐ போலியான மோசடியான ஆவணம் என்றும், அதனை ஆவணத்தை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என 1ம் எதிர்மனுதார் பதிவுத்துறை தலைவருக்கு செய்த மனுவின் பேரில் தூத்துக்குடி மாவட்ட பதிவாளரிடம் விசாரணை நிலுவையில் இருந்து வருகிறது. மனுதார்களுக்கு அ.வ.எண்.156/17 வழக்கு விஷயம் மற்றும் இந்நிறைவேற்றுதல் மனு விபரம் அனைத்தும் ஆரம்பத்தில் இருந்தே நன்றாக தெரியும். 1ம் எதிர்மனுதார் தீர்ப்பாணையின் பலனை அடைய கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மனுதார்கள் மனு தாக்கல் செய்துள்ளனர். தபசில் சொத்தின் பழைய சர்வே எண் 52/1ஏ மற்றும் 52/1ஏபி ஆகியவற்றின் புதிய சர்வே எண் 48/5ல் பட்டாவில் பே.நாரயண நாடாரின் வாரிசுகளின் பெயர்கள் மட்டுமே உள்ளது. ஞா.துரைப்பாண்டி நாடாருக்கோ அல்லது அவரது வாரிசுகளுக்கோ, மனு தபசில் சொத்தில் உரிமையோ அல்லது அனுபவமோ எந்தக்காலத்திலும் இருந்தது கிடையாது. 07.05.2013ம் தேதிய ஏற்பாடு ஆவணத்தின் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் மற்றும் ஆவணம் தயார் செய்தவர் அனைத்தும் மோசடி நபர்கள் ஆவர். குற்ற வழக்கு விசாரணையில் அப்படி நபர்கள் யாரும் அந்த முகவரியில் இல்லை என்று குற்றப்பத்திரிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:27 +0530

**4. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 58, 97, 101 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்களை தடங்கல்காரர்கள் என அங்கீகரித்து தபசில் சொத்தின் மீதான மனுதாரரின் உரிமைகள் மற்றும் உரிமை மூலங்கள் குறித்து தீர்மானிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையாகும்

**தீர்வு**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் நிறைவேற்றுதல் மனு எண்.10/2019ன் 3ம் தரப்பினர் மற்றும் தடங்கல்காரர்கள் ஆவர். 1ம் எதிர்மனுதாரர் மேற்படி நிறைவேற்றுதல் மனுவின் மனுதாரர் ஆவார். 2ம் எதிர்மனுதாரர் அதன் எதிர்மனுதாரர் ஆவார். நிறைவேற்றுதல் மனு எண்.10/2019 ஆனது அசல் வழக்கு எண்.156/2017ல் கடந்த 30.07.2018ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் கிரைய ஆவணம் எழுதித் தரக் கோரி ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தினை நிறைவேற்றுவதற்காக 1ம் எதிர்மனுதாரரால் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண்.156/2017ன் வாதி ஆவார். 2ம் வாதி அதன் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்கள் இருவரும் சகோதரர்கள் ஆவர்.

6. தபசில் சொத்தானது அகரம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண். 48/5ல் 5 ஏர்ஸ் விஸ்தீரணத்தில் (12 சென்ட்) நிலமும் அதில் கட்டியிருக்கிற தெற்கே பார்த்த அகரம் கிராம பஞ்சாயத்து 1வது வார்டு வடக்கு தெருவில் உள்ள 1/168, 1/169, 1/170 எண்கள் கொண்ட பழைய வீடுகள் என்று நிறைவேற்றுதல் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் தனியாக சொத்து விபரம் எதுவும் குறிப்பிட்டு கூறப்படாத நிலையில் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்தினை பொறுத்து தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று உறுதியாகிறது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:31 +0530

7. தபசில் சொத்து மனுதாரர்களின் தாயார் மங்களம் அம்மாளுக்கு பட்டா எண்.383 மூலம் பாத்தியப்பட்டு மனுதாரர்களுக்கு 07.05.2013 ம் தேதிய ஏற்பாடு ஆவணம் எண்.476/2013 வாயிலாக பாத்தியப்படுத்தி கொடுத்தது முதல் மனுதாரர்கள் உரிமையாளர்களாக தபசில் சொத்தினை அனுபவித்து வருவதாக கட்சி செய்துள்ளனர். இம்மனுவானது மனுதாரர்களால் நிறைவேற்றுதல் மனுவின் இடைக்காலத்தில் 25.06.2019 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 பட்டா எண்.383 ஐ பரிசீலனை செய்கையில் நாராயண நாடார் மகன் தங்கவேல் மற்றும் நாராயண நாடார் மனைவி மங்களம்மாள் ஆகியோரது பெயரில் புல எண்.48/5B க்கு 260 சதுர மீட்டர்(6.42 செண்ட்) விஸ்தீரணத்திற்கு மனைவரி தோராய பட்டா 25.08.1993 ம் தேதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

8. எ.மா.சா.ஆ.1 பேச்சிமுத்துவின் கொடிவழி ஜாபிதாவை பரிசீலனை செய்கையில் பேச்சிமுத்துவுக்கு நாராயண நாடார், ஞானமுத்து நாடார், ராமையா நாடார் மற்றும் வீரகுமார் நாடார் ஆகியோர்கள் வாரிசுகள் என்று தெரிய வருகிறது. மேற்படி நாராயண நாடாரின் வாரிசுகள் அருணாச்சல நாடார், தங்கவேல் நாடார் மற்றும் துரையப்பன் நாடார் ஆகியோர் ஆவர். மேற்படி தங்கவேல் நாடாரின் வாரிசுகள் பாலசுப்பிரமணியன், 1 ம் எதிர்மனுதாரர் என்.டி.சிவசுப்பிரமணியன் ராமசுப்பிரமணியன், 2 ம் எதிர்மனுதாரர் வேலசுப்பிரமணியன் ஆகியோர் ஆவர். ஞானமுத்து நாடாரின் மகன்கள் பொன்னையா நாடார், திரவிய நாடார், சுந்தரராஜ நாடார், துரைப்பாண்டி நாடார், தங்கையா நாடார் மற்றும் வேதமாணிக்க நாடார் ஆகியோர் ஆவர். மேற்படி துரைப்பாண்டி நாடாரின் மகன் நாராயண நாடார் ஆவார். மேற்படி நாராயண நாடார் மகன்கள் தான் இம்மனுவின் மனுதாரர்கள் ஆவர். நாராயண நாடாரின் மனைவி மங்களம் அம்மாள் ஆவார்.

9. பேச்சிமுத்து நாடாரின் மகனான ராமையா நாடாரின் வாரிசுகள் குமார் நாடார், கிருஷ்ண நாடார், அம்மணி நாடார், செல்ல நாடார் மற்றும் அருணாச்சல நாடார் ஆவர். மேற்படி வீரகுமார் நாடாரின் மகன்கள் ராஜபாண்டி நாடார், துரை பாண்டி நாடார் ஆவர். தபசில் சொத்தின் விஸ்தீரணம் 5 ஏர்ஸ் 12 செண்ட் என்று சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதன் சர்வே எண்.48/5 ஆகும்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:46:33 +0530

ம.சா.ஆ.1ல் கண்ட சொத்தின் சர்வே எண்.48/5 மற்றும் அதன் விஸ்தீரணம் 260 சதுர மீட்டர்=6.42 செண்ட் ஆகும். மனுதாரர்களின் தாயார் கடந்த 2013ஆம் தேதி மனுதாரர்களுக்கு ஏரல் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.476/2013 வாயிலாக புல எண்.48/5Bல் 3298.78 சதுர அடி= 306.46 சதுர மீட்டர் சொத்தினை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதாக ம.சா.ஆ. 2 தெரிவிக்கிறது.

10. மனுதாரர்களின் தாயார் மங்களம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட பட்டா எண்.383 மூலம் தீர்வை செலுத்தி வரும் சொத்தினை ஏற்பாடு செய்து கொடுப்பதாக அதில் கண்டுள்ளது. பட்டா எண்.383ல் கண்ட சொத்தின் விஸ்தீரணம் 260 சதுர மீட்டர் என்ற நிலையில் மேற்படி மங்களம்மாள் எவ்வாறு 306.46 சதுர மீட்டர் மனையினை கொடுத்துள்ளார் என்று தெரியவில்லை. ம.சா.ஆ.2 ஏற்பாடு ஆவணத்தில் கண்ட சொத்தில் அதில் கதவு எண்கள்.1/168, 1/169, 1/170 உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் அதற்கான வீட்டு வரி ரசீதுகள் எதுவும் ம.சா.ஆ.2ல் இணைக்கப்படவில்லை. மேலும் மின் இணைப்பு எண் என குறிப்பிட்டு எண் எதுவும் சொல்லப்படவில்லை. ம.சா.ஆ.3 புல எண்.48/5க்குரிய வில்லங்க சான்றிதழ் ஆகும்.

11. மனுதாரர்களும், அவர்களது தாயாரும், ம.சா.ஆ.2 ஏற்பாடு ஆவண எண்.426/2013ஐ மோசடியாக உருவாக்கி உள்ளனர் என்று 1ம் எதிர்மனுதாரர் தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் மனுதாரர்கள் வகையறாக்களின் மீது கடந்த 26.12.2014ம் தேதி குற்ற எண்.64/2014ன் கீழ் இ.த.ச.பிரிவுகள். 465, 468, 471, 420 உடன் இணைந்த 120 Bன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று ம.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை தெரிவிக்கிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையின் சான்றிதழ் ம.சா.ஆ.5 ஆகும். ம.சா.ஆ.7 வாரிசு சான்றிதழில் இருந்து 04.05.1992ம் தேதி இறந்து போன துரைப்பாண்டி நாடாரின் மகன் நாராயண நாடாருக்கு மனுதாரர்கள், மனுதாரர்களின் தாயார் மங்களம் அம்மாள், சகோதரிகள் நிர்மலா, நவீதா ஆகியோர் வாரிசுகள் என்று அறிய முடிகிறது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:46:38 +0530

12. ம.சா.ஆ.2 ல் கண்ட சொத்து மங்களம் அம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களின் சகோதரிகளான நிர்மலா மற்றும் நவீதா குறித்து எதுவும் தெரிவிக்காமலும், அவர்களுடைய பங்கை பொறுத்து எதுவும் சொல்லாமலும் மங்களம் அம்மாள் மனுதாரர்களுக்கு மட்டும் ம.சா.ஆ.2 ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். பூர்வீக சொத்து என்று எடுத்துக் கொண்டால் மனுதாரர்களுக்கும் அதில் பாகம் உண்டு. இந்நிலையில் மனுதாரர்களின் தாயார் ஏற்பாடு ஆவணம் செய்து கொடுத்துள்ளது சட்டத்திற்கு முரணாக உள்ளது. புல எண்.48/5 க்கு 12 சென்ட் விஸ்தீணத்திற்கு துரைப்பாண்டிய நாடார் மற்றும் 3 நபர்கள் என்று குறிப்பிட்டு பட்டா எண்.71 க்கு வழங்கப்பட்ட பட்டா பதிவு புத்தகம் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புல எண்.48/5 க்கு நாராயண நாடார் மகன் தங்கவேல் மற்றும் மனுதாரர்களின் பெயரில் 04.07.2014 ம் தேதியில் வழங்கப்பட்டுள்ள நத்தம் நிலவரித் திட்ட தூய சிட்டா நகல் ம.சா.ஆ. 11 ஆகும். அதில் கண்ட சொத்தின் விஸ்தீரணம் 260 சதுர மீட்டர் மட்டுமே ஆகும். பட்டா எண்.383 ல் நாராயண நாடாரின் மகன் தங்கவேல் நாடார் அதாவது எதிர்மனுதாரர்களின் தந்தை பெயர் உரிமையாளராக காண்பிக்கப்பட்டுள்ளது.

13. ம.சா.ஆ.1 ன்படி பார்த்தால் பட்டா எண்.383 ன் படி கண்ட சொத்து முழுவதையும் மனுதாரர்களின் தாயார் ம.சா.ஆ.2 வாயிலாக மனுதாரர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க உரிமை கிடையாது. இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் அவரது சகோதரர்களான 2ம் எதிர்மனுதாரர், பாலசுப்ரமணியன் மற்றும் ராமசுப்பிரமணியன் ஆகியோருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.20/2004 ல் சமாதான உடன்படிக்கையின் படி 24.03.2004 ம் தேதி தீர்ப்பாணை பெற்றுள்ளனர் என்று ம.சா.ஆ.14 தீர்ப்புரை தெரிவிக்கிறது. மேற்படி அசல் வழக்கு எண்.20/2004 ன் தீர்ப்பாணை ம.சா.ஆ.15 ஆகும். மேற்படி தீர்ப்பாணையில் கண்ட 1ம் தபசில் சொத்து இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரருக்கும், 4ம் தபசில் சொத்து 2ம் எதிர்மனுதாரருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:41 +0530

14. மேற்படி அசல் வழக்கு எண்.20/2004 ன் 1ம் தபசிலின் 10ம் இலக்க சொத்து அயன் புஞ்சை சர்வே எண்.48/5ல் செண்ட் 12ல் பிரிவின்றி செண்ட் 6 என்றும், 4ம் தபசில் 6ம் இலக்க சொத்து அயன் புஞ்சை சர்வே எண்.48/5ல் செண்ட் 12ல் பிரிவின்றி செண்ட் 6 என்றும் துலங்குகிறது. மேற்படி 2 சொத்துக்களும் சேர்ந்தது தான் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட தபசில் சொத்தாகும். மேற்படி அசல் வழக்கு எண்.20/2004 ன் வழக்குரை ம.சா.ஆ.16 ஆகும். அதில் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்தானது 25ம் இலக்க சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் ஜெயலட்சுமி அம்மாள் மற்றும் நாராயண நாடாருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.20/2010ல் கடந்த 03.03.2010ம் தேதி எதிர்மனுதாரர்கள் கோரியவாறு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அதன் தீர்ப்புரை ம.சா.ஆ.18ல் இருந்து அறிய முடிகிறது. மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையானது ஒருதலைபட்ச தீர்ப்பாணையாகும்.

15. அசல் வழக்கு எண்.20/2010ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை ம.சா.ஆ.19 ஆகும். அதன் வழக்குரை ம.சா.ஆ.20 ஆகும். அசல் வழக்கு எண்.156/2017 தாக்கல் செய்வதற்கு முன்பாக 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக கிரைய ஆவணம் எழுதி தரக்கோரி 1ம் எதிர்மனுதாரர் அனுப்பிய அறிவிப்பின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.24 ஆகும். மேற்படி அறிவிப்பினை 2ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.25 ஆகும். 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே 31.8.2017ம் தேதி ஏற்பட்ட கிரைய ஆவணம் ம.சா.ஆ.26 ஆகும். அதில் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்தில் பாதி பாகத்தினை 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுப்பதாக கண்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.26ன் அடிப்படையில் ஏற்றதை ஆற்றுகப் பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.156/2017ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை ம.சா.ஆ.21 ஆகும். தீர்ப்பாணை ம.சா.ஆ.22 ஆகவும், வழக்குரை ம.சா.ஆ.23 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:44 +0530

16. மேற்படி ம.சா.ஆ.22 ன் படி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரி தான் நிறைவேற்றுகை மனு எண்.10/2019 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்கள்.20/2004, 20/2010 மற்றும் 156/2017 ஆகியவைகளில் மனுதாரர்கள் மற்றும் அவரது தாயார் ஒரு தரப்பினர்கள் கிடையாது. சிவசுப்பிரமணியனுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.28 ஆகும். ம.சா.ஆ.6 நாராயண நாடார் பெயரில் 1/128 வீட்டிற்கு 1985 முதல் 1996 வரையிலான கால கட்டங்களில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் ஆகும். ம.சா.ஆ.7 நாராயண நாடார் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் ஆகும். சா.சா.ஆ.1, 2, 3 வீட்டு வரி கேட்பு பதிவேடுகள் ஆகும். சா.சா.ஆ.1ல் கதவு எண்.168க்கு 2005–2006ம் ஆண்டில் து.நாராயணன் பெயரிலும், சா.சா.ஆ.2ல் மங்களம் அம்மாள் பெயரில் 2008–2009ம் ஆண்டிலும், 2013–2014ம் ஆண்டில் மங்களம் அம்மாள் பெயரிலும் வரி கேட்பு செய்யப்பட்டுள்ளது

17. மேற்படி ம.சா.ஆ.6, 7 மற்றும் சா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் தபசில் சொத்திற்கான உரிமை மூல ஆவணங்கள் கிடையாது. நீதிப் பேராணை மனு எண்.6582/2015ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் செய்த விசாரணையின் முடிவில் வரி விதிப்பு பெயர் மாற்றம் சம்பந்தமாக நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு அகரம் கிராம ஊராட்சி செயல் அலுவலர் பிறப்பித்த உத்தரவு சா.சா.ஆ.4 ஆகும். மேற்படி சா.சா.ஆ.4ன் நகல் சா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.சா.ஆ.7 முதல் 9 மற்றும் சா.சா.ஆ.13 ஆவணங்கள் மேற்படி வரி விதிப்பு சம்பந்தமாக ஏற்பட்டவைகள் ஆகும். அதனடிப்படையில் மனுதாரர்கள் எந்த உரிமை மூலமும் கோர முடியாது.

18. சா.சா.ஆ.5 அசல் வழக்கு எண்.20/2010ன் தீர்ப்பாணை ஆகும். சா.சா.ஆ.6 அதன் தீர்ப்புரை ஆகும். சா.சா.ஆ.10 ஏற்பாடு ஆவண எண்.476/2013ஐ ரத்து செய்யக் கோரி 1ம் எதிர்மனுதாரர் பதிவு துறை அலுவலருக்கு அனுப்பிய புகார் மனு ஆகும். சா.சா.ஆ.12 அசல் வழக்கு எண்.20/2004ல் அதன் உபய வாதிகள் தாக்கல் செய்த சமரச உடன்படிக்கை ஆகும். சா.சா.ஆ.14 நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முந்தைய கிராம கணக்கு பதிவேட்டினை பரிசீலனை செய்கையில் ஞா.துரைபாண்டி நாடார், அருணாசல நாடார், துரையப்ப நாடார்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:47 +0530

மற்றும் தங்கவேல் நாடார் ஆகியோர் பெயரில் புல எண்.48/5 க்கு 12 செண்ட் விஸ்தீரணத்திற்கு பட்டா எண்.71 என பதிவாகியுள்ளது என அறிய முடிகிறது. சா.சா.ஆ.14 ஆவணமானது சா.சா.ஆ.20 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டா எண்.71ன் பட்டா பதிவு புத்தகம் தான் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. எனவே, ம.சா.ஆ.8 துரைபாண்டிய நாடாரை தவிர மற்ற 3 பேர்களின் பெயர்கள் அருணாசல நாடார், துரையப்ப நாடார் மற்றும் தங்கவேல் நாடார் என்று அறிய முடிகிறது. சா.சா.ஆ.15 நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு பிந்தைய அ பதிவேட்டில் சர்வே எண்.48/5 க்கு 5 ஏர்ஸ் விஸ்தீரணத்திற்கு அருணாசல நாடார் மற்றும் 4 பேர்கள் பெயரில் பட்டா எண்.444 ஆக பதிவாகியுள்ளது. பட்டா எண்.444 ல் உள்ள நபர்களின் பெயர்கள் நா.அருணாசல நாடார். நா.தங்கவேல் நாடார். நா.துரையப்பநாடார், ரா.அருணாசலம், பா.அன்னலெட்சுமி அம்மாள் என்று சா.சா.ஆ.16 விவரப்பட்டியல் தெரிவிக்கிறது. சா.சா.ஆ.17 நிலஉடைமை மேம்பாட்டு திட்ட சிட்டாவில் தங்கவேல் நாடார், துரையப்ப நாடார், ராமையா நாடார் மகன் அருணாசலம், பார்வதி ஆதித்தன் மனைவி அன்னலெட்சுமி அம்மாள், துரையப்ப நாடார் மக்கள் நாராயணன், பத்மநாதன், தனகோபால், வசந்தி, இன்பவேணி ஆகியோர் பெயர்களி பதிவாகியுள்ளது.

20. சர்வே எண்.48 க்கான புல வரைபடம் சா.சா.ஆ.18 ஆகும். 31.10.2013 ம் தேதி துரையப்ப நாடார் மகன் நாராயணன் பட்டா பெயர் மாற்றம் செய்யக் கோரி கொடுத்த மனு சா.சா.ஆ.19 ஆகும். அதனடிப்படையில் பட்டா எண்.444 ல் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சா.சா.ஆ.21 செட்டில் மெண்ட் நில பதிவேட்டின் அ பதிவேடு ஆகும். அதில், நாராயண நாடார் மக்கள் அருணாசல நாடார், தங்கவேல் நாடார், துரையப்ப நாடார் மற்றும் ஞானமுத்து நாடார் மகன் துரைபாண்டிய நாடார் ஆகியோர் சர்வே எண்.48/5 ன் உரிமையாளர்களாக காண்பிக்கப்பட்டுள்ளனர். ஞானமுத்து நாடார் என்ற துரைபாண்டிய நாடார் என்ற பெயரானது FSE 196 என்று பின்னதாக சேர்க்கப்பட்டுள்ளது.

21. மேற்படி துரைபாண்டிய நாடாரின் வழி தான் மனுதாரர்கள் தபசில் சொத்தில் உரிமை கோருகின்றனர். மேற்படி துரைபாண்டிய நாடார் பெயர் எவ்வாறு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:46:51 +0530

சா.சா.ஆ.21 ல் பதிவாகியுள்ளது என்பதற்கு தெளிவான விளக்கம் எதுவும் இல்லை. மேற்படி சா.சா.ஆ.21 ன் தொடர்ச்சியாக தான அனைத்து வருவாய்துறை ஆவணங்களிலும் ஞா.துரைபாண்டிய நாடார் மற்றும் அவரது வாரிசுகள் பெயர் இடம் பெற்றுள்ளது என்று அறிய முடிகிறது. பொதுவாக வருவாய்துறை ஆவணம் உரிமைமூல ஆவணமாக எடுத்துக் கொள்ள முடியாது. சா.சா.ஆ.23 மின் கட்டணம் செலுத்தியதற்கான மின் இணைப்பு விபர பட்டியலும் ஒரு நபருக்கு உரிமை மூலத்தினை வழங்காது.

22. தபசில் சொத்திலுள்ள வீடுகள் பே.நாராயண நாடாரால் 1916–1917 ல் கட்டப்பட்டு பூர்வீகமாக கிடைத்த வீடுகள் என்றும், 1925 ம் ஆண்டு நாராயண நாடார் எழுதி வைத்த உயில் ஆவண எண்.11/1925 வாயிலாக அவரது ஆண் மக்களான நா.அருணாசலம், நா.தங்கவேல் மற்றும் நா.துரையப்பன் ஆகியோருக்கு கிடைத்ததாகவும், 1960 ம் வருடத்தில் நாராயண நாடாரின் வாரிசுகளுக்கு இடையில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தபசில் சொத்து எதிர்மனுதாரரின் தந்தை தங்கவேல் நாடாருக்கு கிடைத்து அனுபவித்து வந்ததாகவும், தங்கவேல் நாடார் காலம் சென்ற பிறகு அசல் வழக்கு எண்.20/2004 ல் ஏற்பட்ட தீர்ப்பின் பேரில் தங்கவேல் நாடாரின் வாரிசுகளான 1, 2 எதிர்மனுதாரர்கள், ராமசுப்பிரமணியன் மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர் பாகம் செய்து கொண்டதில் தபசில் சொத்து எதிர்மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டதாகவும், எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.20/2010 ல் எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளதாகவும், 2 ம் எதிர்மனுதாரர் ஏற்படுத்தி கொடுத்த ஆவணத்தின் பேரில் தபசில் சொத்தில் 2 ம் எதிர்மனுதாரரின் பாதி பாகத்தினை கிரையம் செய்து தரக் கோரி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.156/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கட்சி செய்யப்பட்டு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

23. எதிர்மனுதாரர்களின் தாத்தாவான பே.நாராயண நாடாருக்கு ஆரம்பத்தில் குழந்தைகள் இல்லாததால் அவரது சகோதரரான ஞானமுத்து நாடாரின்

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:46:53 +0530

மகனான துரைபாண்டி நாடாரை அபிமான புத்திரனாக வளர்த்து வந்துள்ளார். மேற்படி பே.நாராயண நாடார் 21.09.1925ம் தேதி உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்பதை இருதரப்பினரும் மறுக்கவில்லை. மேற்படி உயில் ஆவணம் ஆழ்வார்திருநகரி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.11/1925 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆகும். எ.ம.சா.ஆ.2ல் மனுதாரர்களின் முன்னோரான ஞா.துரைப்பாண்டி நாடாரின் அபிமான புத்திரனுக்கு 1வது தபசில் 4 வது அயிட்ட மனையில் ஓலைபறை வீட்டிற்கு மேல்புறமாக கிழமேல் தச்சுமுழம் 4 16/14 மனையில் ரூ.1000 வான செலவில் கட்டிய கல் வீட்டினை கொடுப்பதாகவும் மற்ற வீடுகளை பே. நாராயண நாடாரின் மக்கள் 3 பேர்களுக்கும் பாகம் வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது அருணாச்சல நாடார், பேச்சிமுத்து நாடார் மறறும் துரையப்ப நாடார் ஆகிய 3 பேர்களும் பே.நாராயண நாடாரின் மற்ற வீடுகளை பாகம் வைத்து கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

24. மேற்படி எ.ம.சா.ஆ.2 உயிலில் தபசில் சொத்தானது ஜமீன் சர்வே எண்.52/1Bல் செண்ட் 3ம் 52/1ABல் செண்ட் 8ம் ஆக செண்ட் 11 ஆகவும், அதிலுள்ள வீடுகளும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.2 உயிலில் 4ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தில் காணப்படும் வீட்டினை மட்டுமே மனுதாரர்களின் முன்னோரான துரைபாண்டி நாடாருக்கு கொடுப்பதாக சொல்லப்பட்டுள்ளது. வேறு வீடுகள் எதுவும் பாத்தியப்படுத்தி கொடுப்பதாக எ.ம.சா.ஆ.2 சொல்லப்படவில்லை. மேற்படி ஞா.துரைபாண்டி நாடாருக்கு எ.ம.சா.ஆ.2ன் படி கொடுக்கப்பட்ட வீடு ஜமீன் சர்வே எண்.53/6ல் உள்ளதாக எ.ம.சா.ஆ.2 தெரிவிக்கிறது. மேற்படி ஜமீன் சர்வே எண்.53/6ன் தற்போதைய சர்வே எண்.48/5 கிடையாது.

25. எ.ம.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ள ஜமீன் சர்வே எண்.52/1B மற்றும் 52/1AB ஆகியவைகளின் தற்போதைய சர்வே எண்.48/5 என்று உறுதிப்படுத்துவது போல் சா.சா.ஆ.21 மற்றும் ஜமீன் சர்வே எண்கள்.52/1A, 52/1Bக்கு புதிய சர்வே எண்.48/5க்குரிய உத்தேச பட்டாவின் அசல் எ.ம.சா.ஆ.11 உள்ளது. 1ம்

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:46:57 +0530

எதிர்மனுதாரர் பெயரில் கதவு எண்.1/168, 1/169, 1/170 ஆகியவைகளுக்கு 2011–2012, 2012–2013 மற்றும் 2019–2020, ஆண்டுகளில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகள் எ.ம.சா.ஆ.4 ஆகும். தபசில் சொத்தினைப் பொறுத்து மனுதாரர்கள் பெயரில் ஏற்பட்டுள்ள ஏற்பாடு ஆவண எண்.476/2013 க்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் தூத்துக்குடி மாவட்ட குற்றப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் எ.ம.சா.ஆ.4 ஆகும். தபசில் சர்வே எண்.48/5 க்குரிய தற்போதைய பட்டா எண்.444 ன் நகல் எ.ம.சா.ஆ.6 ஆகும்.

26. 2ம் மனுதாரர் ஸ்ரீவைகுண்ட வட்டாட்சியரிடம் அனுபவ சான்று கேட்டு கொடுத்த மனுவில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு 23.10.2014 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எ.ம.சா.ஆ.7 ஆகும். அதில் அசல் வழக்கு எண்.20/2010 ன் நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவானது 2ம் மனுதாரரால் நத்தம் புல எண்.48/5B ல் உள்ள கதவு எண்.1/168 க்கு அனுபவ சான்று கேட்டு கொடுக்கப்பட்டதாகும். மேற்படி உத்தரவு 2ம் மனுதாரருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக எ.ம.சா.ஆ.7 தெரிவிக்கிறது.

27. எ.ம.சா.ஆ.7 ஏற்பட்ட தேதி 23.10.2014 ஆகும். எனவே, அசல் வழக்கு எண்.20/2010 குறித்து மேற்படி தேதியிலேயே மனுதாரர்களுக்கு நன்கு தெரியும் என்பது தெள்ளத் தெளிவாகிறது. மேலும், ஏற்பாடு ஆவண எண்.476/2013 க்கு எதிராக 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் 26.12.2014 ம் தேதியிலேயே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்ற வழக்கானது தூத்துக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.24/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி குற்ற வழக்கு குறித்து மனுதாரர்கள் இம்மனுவில் முணுமுணுக்கவில்லை.

28. மேலும், வரிவிதிப்பு சம்பந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் WP(MD)No.6582/2015 தாக்கல் செய்ததன் பேரில் அகரம் ஊராட்சிமன்ற தலைவர் 2015ம் ஆண்டிலேயே நீதிமன்றம் மூலம் பரிகாரம்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:47:00 +0530

தேடிக் கொள்ளுமாறு கூறியுள்ளார். ஆனால் மனுதாரர்கள் இது தொடர்பாக அப்போது எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. இதனடிப்படையில் பார்த்தால் மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே 2014 ம் ஆண்டிலேயே தபசில் சொத்தினை பொறுத்து உரிமை மூலம் சம்பந்தமாக வழக்கு மூலம் எழுந்துள்ளது. ஆனால், மனுதாரர்கள் உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இந்நிறைவேற்று மனு மற்றும் அதன் அசல் வழக்கு குறித்து அசல் வழக்கு எண்.64/2018 வேறு நபர்களால் தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு தான் தெரிய வந்ததாக பொய்யான சங்கதிகளை முன்னிட்டு நீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.

29. ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியரிடம் அனுபவ சான்று கேட்டு 2 ம் மனுதாரர் கொடுத்த மனு நிராகரிக்கப்பட்ட 23.10.2014 ம் தேதியிலேயே தபசில் சொத்தினைப் பொறுத்து வழக்கு மூலம் எழுந்துவிட்டது. ஏற்பாடு ஆவண எண்.476/2013 சம்பந்தமாக மனுதாரர்கள் தரப்பினர் மீது 26.12.2014 ம் தேதியே குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஆனால் மனுதாரர்கள் உரிய பரிகாரத்திற்காக வழக்கு எதுவும் தாக்கல் செய்யாமல் இம்மனுவினை மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கு எண்.156/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையானது 1 ம் எதிர்மனுதாரருக்கும் 2 ம் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட ஒப்பந்தத்தின் பேரிலானது ஆகும். அதில் தலையிட மனுதாரர்களுக்கு சட்டப்படி எந்த உரிமையும் கிடையாது.

30. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்களிலிருந்து மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் இடையே 2014 ம் ஆண்டிலிருந்தே தபசில் சொத்து சம்பந்தமாக தொடர்ந்து பிரச்சனை இருந்து வருகிறது என்றும் உறுதியாகிறது. மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு மாண்புமிகு தூத்துக்குடி 1 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தபசில் சொத்தினைப் பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன மீட்புப் பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கு எண்.24/2021 தாக்கல் செய்துள்ளனர் என்று அதன் வழக்குரை சார்வு நகல் எ.ம.சா.ஆ.13 லிருந்து அறிய முடிகிறது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:47:04 +0530

31. தபசில் சொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர்கள் இல்லை என்பதை ஒத்து கொண்டு மேற்படி அசல் வழக்கில் சுவாதீன மீட்புப் பரிகாரம் கோரியுள்ளனர். மேற்படி அசல் வழக்கு எண்.24/2021ல் கடந்த 07.02.2026ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பதிவிறக்க நகல் எ.ம.சா.ஆ.18 ஆகும். மனுதாரர்கள் இந்நிறைவேற்று மனுவில் எந்த ஆவணங்களின் அடிப்படையில் உரிமைமூலம் கோரியுள்ளனரோ அதே ஏற்பாடு ஆவணத்தின் அடிப்படையில் உரிமை மூலம் கோரியுள்ளனர். மேற்படி அசல் வழக்கு எண்.24/2021ல் மனுதாரர்களின் கட்சி நிராகரிக்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று எ.ம.சா.ஆ.18 உறுதி செய்கிறது.

32. மேலும், மனுதாரர்களின் ஏற்பாடு ஆவணமான 476/2013 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று மேற்படி வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் ம.சா.ஆ.2 ஏற்பாடு ஆவணத்தை அதில் கண்ட சாட்சிகள் மற்றும் நிறைவேற்றுதாரர் வாயிலாக இம்மனுவிலும் நிரூபிக்கவில்லை. செட்டில்மெண்ட் நிலபதிவேட்டில் ஏற்பட்ட தவறான பதிவின் அடிப்படையில் மனுதாரர்கள் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தினை உருவாக்கி தபசில் சொத்தினை அபகரிக்க முயற்சித்துள்ளதாகவும், தபசில் சொத்தின் அனுபவம் எப்போது எப்படி மனுதாரர்கள் வசமிருந்து பறிக்கப்பட்டது என்பது குறித்து சொல்லவில்லை என்றும், மேற்படி அசல் வழக்கானது தேவையில்லாத வழக்கு என்றும் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

33. மேற்படி அசல் வழக்கு எண்.24/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு விரோதமாக தபசில் சொத்தில் மனுதாரர்களுக்கு உரிமை மூலம் உள்ளதாக கூறுவதை ஏற்க இயலாது. மேற்படி தீர்ப்பிற்கு இம்மனுவின் தரப்பினர்கள் கட்டுப்பட்டவர்கள் ஆவர். மேலும், பே.நாராயண நாடார் வாதிகளின் முன்னோரான ஞா.துரைபாண்டி நாடாருக்கு 17.05.1928ல் எழுதிக் கொடுத்துள்ள ம.சா.ஆ.12 நன்கொடை ஆவணத்தில் தபசில் சொத்து குறிப்பிடப்படவில்லை. உயில் ஆவண எண்.11/25ல் ஞா.துரைப்பாண்டி நாடாருக்கு எழுதிக் கொடுத்தவை பொறுத்து மேற்படி உயில் ரத்து செய்யப்பட்டதாக ம.சா.ஆ.12 தெரிவிக்கிறது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:47:08 +0530

34. மேலும், மேற்படி உயிலில் தபசில் சொத்து துரைப்பாண்டி நாடாருக்கு ஒதுக்கப்பட்டதாக துலங்கவில்லை. மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில், மனுதாரர்கள் எந்தவித உரிமையும் இல்லாமல் இம்மனுவினை அசல் வழக்கு எண்.156/2017 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற விடாமல் காலதாமதப்படுத்தும் நோக்கில் தாக்கல் செய்துள்ளதால் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

35. **முடிவாக,**

**இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் என்னால் இவ்வவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:47:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்

ம.சா.1.–நவீததுரை

ம.சா.2–சக்திவேல்

ம.சா.3–முத்துமாரி

ம.சா.4–முத்துமாரி

ம.சா.5–அன்றோ

ம.சா.6–அரிஸ்ராஜாசிங்

மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | – | மனு தபசில் சொத்தான அகரம் கிராமம் நத்தம் சர்வே எண்.48/5B2 மனுதாரர்கள் தாயார் பெயரிலுள்ள நத்தம் பட்டா அசல். |
| 2 | ம.சா.ஆ.2 | 07.03.2013 | மங்களம்மாள் நிறைவேற்றுதல் மனு தபசிலாக குறிப்பிடப்படும் சொத்துகளை ஏற்பாடு |

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:47:17 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | செய்ததாக சொல்லப்படும் ஆவணம் சார்பதிவக சான்றிட்ட நகல் |
| 3 | ம.சா.ஆ.3 | 01.01.1987 முதல் 12.6.2019 வரை | புல எண் 48/5 க்கு உரிய வில்லங்கசான்றிதழ் கணினி நகல் |
| 4 | ம.சா.ஆ.4 | – | CC24/18 ல் உள்ள முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 5 | ம.சா.ஆ.5 | – | CC24/18 ல் உள்ள குற்றப் பத்திரிக்கை மற்றும் இணைப்புகள் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 6 | ம.சா.ஆ.6 | – | மனு தபசில் வீட்டிற்கு மனுதாரர்களின் தந்தை நாராயணநாடார் தாயார் மங்கலம்மாள் பெயரிலுள்ள வீட்டுதீர்வை ரசீது அசல் |
| 7 | ம.சா.ஆ.7 | – | மனுதாரர்களின் வாரிசு சான்றிதழ் அசல் |
| 8 | ம.சா.ஆ.8 | – | மனுதாரர்களின் தாத்தா துரைபாண்டி பெயரிலுள்ள பட்டா பதிவு புத்தகம் அசல் |
| 9 | ம.சா.ஆ.9 | – | மனுதாரர்களின் தகப்பனார் நாராயணநாடார் பெயரிலுள்ள தபசில் வீட்டிற்கான மின்கட்டண அட்டை ரசீது மின் இணைப்பு உத்தரவு |
| 10 | ம.சா.ஆ.10 | – | மனுதாரர்களின் தாத்தா துரைபாண்டி நாடாருக்கு ஜமீன்தாரர் வழங்கிய ஜமீன் பட்டா எண்ணம் 3 |
| 11 | ம.சா.ஆ.11 | – | மனு தபசில் சொத்திற்கு மனுதாரர்கள் பெயரிலுள்ள பட்டா |
| 12 | ம.சா.ஆ.12 | 17.05.1928 | கே.நாராயண நாடார் ஞா.துரைபாண்டிநாடாருக்கு எழுதிக் கொடுத்த நன்கொடை ஆவணம் சான்றிட்ட நகல். |
| 13 | ம.சா.ஆ.13 | 10.08.1932 | துரைபாண்டி நாடாருக்கு ஞானமுத்து நாடார் மகன்கள் திரவிய நாடார், பொன்னையா நாடார், சுந்தர நாடாரால் எழுதிக் கொடுக்கப்பட்ட புள்ளி விடுதலை ஆவணம் |

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:47:19 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | ம.சா.ஆ.14 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.20/2004 ன் தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 15 | ம.சா.ஆ.15 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 20/2004 ன் தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 16 | ம.சா.ஆ.16 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 20/2004 ன் வழக்குரை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 17 | ம.சா.ஆ.17 | – | மனுதார்களின் தாத்தா துரைப்பாண்டி நாடாருக்கு பில் கலெக்டர் அனுப்பிய டிமாண்ட் நோட்டீஸ் அசல் |
| 18 | ம.சா.ஆ.18 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 20/2010 ன் தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 19 | ம.சா.ஆ.19 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 20/2010 ன் தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 20 | ம.சா.ஆ.20 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 20/2010 ன் வழக்குரை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 21 | ம.சா.ஆ.21 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண் 156/2017 ன் தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 22 | ம.சா.ஆ.22 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.156/2017 ன் தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 23 | ம.சா.ஆ.23 | – | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அவ.எண். 156/2017 ன் வழக்குரை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 24 | ம.சா.ஆ.24 | – | நிறைவேற்றுதல் மனு எண் 10/2019 மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நீதிமன்ற சான்றிட்ட நகல் |

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:47:23 +0530

| | | | |
|---|---|---|---|
| 25 | ம.சா.ஆ.25 | – | நிறைவேற்றுதல் மனு எண் 10/2019 மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 26 | ம.சா.ஆ.26 | – | நிறைவேற்றுதல் மனு எண் 10/2019 மனுதாரரும், எதிர்மனுதாரரும் பிறப்பித்துக்கொண்ட பதிசெய்யப்படாத கிரைய ஆவணம் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| 27 | ம.சா.ஆ.27 | 29.09.2003 | சிவசுப்பிரமணியனுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நீதிமன்ற சன்றிட்ட நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்–இல்லை

எ.ம.சா.1–சிவசுப்பிரமணியன்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்–இல்லை

| | | | |
|---|---|---|---|
| 1 | எ.ம.சா.ஆ.1 | – | பேச்சிமுத்துவின் கொடி வழி ஜாபிதா |
| 2 | எ.ம.சா.ஆ.2 | 21.09.1925 | நாராயணன் நாடார் எழுதி வைத்த உயிலின் சான்றிட்ட நகல் |
| 3 | எ.ம.சா.ஆ.3 | – | மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் WP(MD)No.6582/2015 உத்தரவின்படி அகரம் உள்ளாட்சி தலைவர் பிறப்பித்த உத்தரவு |
| 4 | எ.ம.சா.ஆ.4 | – | தாவா சொத்திற்குரிய தீர்வை ரசீதுகள் எண்ணம் 9 |
| 5 | எ.ம.சா.ஆ.5 | – | தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் முதல் தகவல் அறிக்கை 64/2014 ன் சான்றிட்ட நகல் |
| 6 | எ.ம.சா.ஆ.6 | – | சர்வே எண்.48/5 ன் கணினிபட்டாவின் பதிவிறக்கப்பட்ட நகல் |
| 7 | எ.ம.சா.ஆ.7 | – | ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அனுப்பிய மேலெழுத்து |
| 8 | எ.ம.சா.ஆ.8 | 14.01.2014 | மாவட்ட பதிவாளர் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு |
| 9 | எ.ம.சா.ஆ.9 | – | தாவா சொத்திலுள்ள வீடுகளுக்கு நா.தங்கவேல் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது. |

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:47:26 +0530

| | | | |
|---|---|---|---|
| 10 | எ.ம.சா.ஆ.10 | 28.03.2016 | தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியருக்கு 1ம் எதிர்மனுதாரரின் மகன் அனுப்பிய மனுவின் கை நகல் |
| 11 | எ.ம.சா.ஆ.11 | – | மேற்படி மனுவிற்கு வட்டாட்சியர் அனுப்பிய தகவல் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணம் |
| 12 | எ.ம.சா.ஆ.12 | – | மனு தபசில் சொத்தின் ஜமீன் சர்வே எண்.52/1A, 52/1B, புதிய சர்வே எண்.48/5 க்குரிய உத்தேச பட்டாவின் அசல் |
| 13 | எ.ம.சா.ஆ.13 | – | தூத்துக்குடி மாண்புமிகு மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.24/2021ன் வழக்குரையின் சார்வு நகல் |
| 14 | எ.ம.சா.ஆ.14 | – | பேச்சிமுத்து நாடாரின் கொடிவழி ஜாபிதா |
| 15 | எ.ம.சா.ஆ.15 | – | அகரம் கிராமம் புல எண்.48ன் புல வரைபடத்தின் இணையவழி நகல் |
| 16 | எ.ம.சா.ஆ.16 | – | புல எண்.48/5ன் கணினி பட்டாவின் இணையவழி நகல் |
| 17 | எ.ம.சா.ஆ.17 | 03.07.1997 | 1ம் எதிர்மனுதாரரின் தந்தையின் இறப்பு சான்றின் உண்மை நகல் |
| 18 | எ.ம.சா.ஆ.18 | 07.02.2026 | தூத்துக்குடி மாண்புமிகு 1வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.24/2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை–பதிவிறக்க நகல் |

<u>சாட்சிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | சா.சா.ஆ.1 | 2005–2006 | வீட்டு வரி கேட்பு பதிவேடு அதிலுள்ள 9ம் பக்கம் கதவு எண்.168 ற்குரிய பதிவேடு நகல் |
| 2 | சா.சா.ஆ.2 | 2008–2009 | வீட்டு வரி கேட்பு பதிவேடு அதிலுள்ள 9ம் பக்க கதவு எண்.168 ற்குரிய பதிவேடு நகல் |
| 3 | சா.சா.ஆ.3 | 2013–2014 | மங்களம்மாள் பெயரிலுள்ள வரி விதிப்பு கேட்பு பதிவேடு நகல் |
| 4 | சா.சா.ஆ.4 | 13.03.2015 | W.P(MD) No.6582/2015 உத்தரவின்படி இறுதி ஆணை சார்வு நகல் |
| 5 | சா.சா.ஆ.5 | – | இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.20/2010ன் |

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:47:32 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | தீர்ப்பாணை நகல் |
| 6 | சா.சா.ஆ.6 | – | இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.20/2010 ன் தீர்ப்புரை நகல் |
| 7 | சா.சா.ஆ.7 | 05.09.2014 | N.T.சிவசுப்பிரமணியன் ஊராட்சி மன்றத்திற்கு கதவு எண்கள்.1/168, 1/169, 1/170 வீட்டு தீர்வை பெயர் மாற்றம் செய்யக் கூடாது என்று அனுப்பிய பதிவு தபால் நகல் |
| 8 | சா.சா.ஆ.8 | – | பஞ்சாயத்து தலைவர் நீதிப்பேராணை மனுவில் உத்தரவுநிறைவேற்றுதல் தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிய இறுதி ஆணை நகல் |
| 9 | சா.சா.ஆ.9 | – | நிறைவேற்றுதல் மனுவின் மனுதாரர் N.T.சிவசுப்பிரமணியனும் எதிர்மனுதாரர் வேல்சுப்பிரமணியனும் 1/168, 1/169, 1/170 க்கு வீட்டு தீர்வை தரும்படி கொடுத்த விண்ணப்ப மனு |
| 10 | சா.சா.ஆ.10 | – | 22.06.2015 ம் தேதிய கடிதத்திற்கு N.T.சிவசுப்பிரமணியன் உறுதிமொழி என்ற பெயரில் ஊராட்சிமன்ற தலைவருக்கு கொடுத்த கடிதம் |
| 11 | சா.சா.ஆ.11 | – | அகரம் ஊராட்சிமன்ற அலுவலக பதிவேட்டில் உள்ள பதிவுதுறை பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரத்தை ரத்து செய்யக் கோரி என்.டி.சிவசுப்பிரமணியன் அனுப்பிய மனுவின் நகல் |
| 12 | சா.சா.ஆ.12 | – | அசல் வழக்கு எண்.20/2004 ல் தாக்கல் செய்யப்பட்ட சமரச உடன்படிக்கை நகல் |
| 13 | சா.சா.ஆ.13 | 19.05.2011 | அகரம் ஊராட்சிமன்ற தீர்மான நகல் |
| 14 | சா.சா.ஆ.14 | – | நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு உள்ள பழைய கிராம கணக்கு பதிவேடு |
| 15 | சா.சா.ஆ.15 | – | நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு பின்பு உள்ள கிராம கணக்கு அ பதிவேடு |
| 16 | சா.சா.ஆ.16 | – | நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திற்கு |

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 17:47:35 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | முன்புள்ள கிராம கணக்கு அ பதிவேட்டின் விபரப்பட்டியல் |
| 17 | சா.சா.ஆ.17 | – | நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு பிந்தைய கிராம 10(1)சிட்டா |
| 18 | சா.சா.ஆ.18 | – | சர்வே எண்.48 க்கான புல வரைபடம் |
| 19 | சா.சா.ஆ.19 | – | புல எண்.48/5 க்கான பட்டா மாறுதல் மனுவும், உத்தரவும் |
| 20 | சா.சா.ஆ.20 | – | புல எண்.48/5 க்கான கிராம கணக்கு அ பதிவேடு |
| 21 | சா.சா.ஆ.21 | – | புல எண்.48/5 க்கான SLR அ பதிவேடு நகல் |
| 22 | சா.சா.ஆ.22 | – | மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட மேலெழுத்து கடிதம் |
| 23 | சா.சா.ஆ.23 | – | Consumer LD Billing மின் இணைப்பு விவரப்பட்டியல் |

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 17:47:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.